




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 09.03.2023

## தலைமைக் கழக அறிவிப்பு

**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் 6ஆம் ஆண்டு தொடக்க விழா:**
**சென்னை தலைமைக் கழக அலுவலகத்தில்**
**பொதுச்செயலாளர் அவர்கள் கழக கொடியேற்றுகிறார்கள்!**

என்றும் நம்மை இயக்கும் ஆற்றலின் சக்தி நம் **இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் திருவுருவத்தைக் கொடியில் தாங்கியும், அவர்தம் கொள்கைகளை நெஞ்சில் ஏந்தியும் சோதனைகள், நெருக்கடிகள் அனைத்தையும் கடந்து பயணித்து வரும் **அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் 6ஆம் ஆண்டு தொடக்க விழா** வரும் 15.03.2023 புதன்கிழமை அன்று கொண்டாடப்படவிருக்கிறது.

இதையொட்டி அன்றைய தினம் காலை 10:00 மணியளவில் **சென்னை ராயப்பேட்டையில் உள்ள தலைமைக் கழக அலுவலக வளாகத்தில் கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் கழக கொடியினை ஏற்றிவைத்து தொண்டர்களோடு தொடக்க விழா கொண்டாட்டத்தில் பங்கேற்க விருக்கிறார்கள்.**

இந்நிகழ்வில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை, வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**